**செய்தி வெளியீடு எண் : 1313** **நாள் : 03.08.2022**

<u>செய்தி வெளியீடு</u>

சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஆத்தூர் சுங்கச் சாவடியினை அடுத்து விழுப்புரம் மாவட்டத்தில், ஓங்கூர் அருகே பழுதடைந்த பாலத்தினை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் **திரு.எ.வ.வேலு** அவர்கள் இன்று (3.8.2022) ஆய்வு மேற்கொண்டார்.

---

சென்னை – திருச்சி சாலையில், ஆத்தூர் சுங்கச் சாவடியினை அடுத்து விழுப்புரம் மாவட்டத்தில், ஓங்கூர் அருகே பழுதடைந்த பாலத்தினை, (கி.மீ.104/050-ல்) அமைந்துள்ள இடதுபுற சாலையில் அமைந்துள்ள பழைய பாலம் 13.080 மீட்டர் அகலமுள்ள 4 கண்கள் (Spans) கொண்டதாகும்.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாயிலாக, நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும்போது, பழைய பாலத்திற்கு இணையாக, ஒரு புதிய பாலம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இந்தப் பழைய பாலத்தின் ஓடுதளம் 8.50 மீட்டர் அகலம் கொண்ட 3 T.Beam-களுடன் கட்டப்பட்டுள்ளது.

வலது புறம் ஓரத்தில் உள்ள T.Beam இடம் பெயர்ந்ததன் காரணமாக அதிக வாகன எடையினால், pier cap-க்கு அதிர்வு ஏற்பட்டு இதன் கீழுள்ள தாங்கு தகடு (bearing) சேதமடைந்து சீரற்ற நிலை ஏற்பட்டுள்ளது.Bearing-ன் கீழ் அமைந்துள்ள உலோகம் சிதைந்த நிலையில் உள்ளது.

இந்தப் பாலத்தில் தாங்கு தகடுகள் (bearings) மற்றும் விரிவடையும் தன்மை கொண்ட இணைப்புகள் (Expansion joints) புதிதாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாகனப் போக்குவரத்து முழுவதும் வலப்புறம் அருகிலுள்ள புதிய பாலத்தில் 28.07.2022 முதல் திருப்பிவிடப்பட்டு, பழைய பாலத்தில் பழுதுபார்க்கும் பணிகள், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாயிலாக நடைபெற்று வருகிறது. இப்பணி 10.8.2022க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த.மோகன், இ.ஆ.ப., அவர்கள், விழுப்புரம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் முனைவர். ந.ஸ்ரீநாதா, இ.கா.ப., அவர்கள், தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட இயக்குநர் திரு.சைதன்யா அவர்கள், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்கள் திரு. பாலமுருகன், திரு.சந்திரசேகர் மற்றும் கோட்டப் பொறியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in